මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
Media Freedom Rights Monitoring Report

FMM SRI LANKA නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය சுதந்திர ஊடக இயக்கம் Free Media Movement

MFRMD

2022 நவம்பர்

Vol. 02 - தொகுதி II



மருத்துவர் சமல் சஞ்சீவ பணி இடைநிறுத்தம்.



தரிந்து ஜயவர்த்தன விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை.




பெண்கள் பேரணிக்கு காவல்துறையினர் இடையூறு விளைவித்தமை.

ஊடக சுதந்திரம் குறித்து நவம்பர் மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் கடந்தகால சம்பவங்களின் வளர்ச்சிப்போக்குகள் மற்றும் அந்தச் சம்பவங்கள் தொடர்பான அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் சட்ட உருவாக்கம், சட்டத் திருத்த முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதி கூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 16 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் நவம்பர் 2022 அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 09 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 05 சம்பவங்கள், கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் என்ற தலைப்பில் ஒரு சம்பவம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவம் தொடர்பான ஒரு சம்பவம் என மொத்தம் 16 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் இங்கு அவதானிக்கப்பட்டுள்ளன.

## நவம்பர் மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. ஊடகங்களில் கருத்து தெரிவித்தமைக்காக மருத்துவரான சமல் சஞ்சீவ பணிநீக்கம் செய்யப்பட்டமை.

2. தெரணியகல வீதியைச் சீரமைக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட 6 பேர் கைது!

3. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் தொடர்பான விசாரணைகளின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கைகளை முதலில் நீதிமன்றில் வழங்க மறுத்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், பின்னர் அந்த அறிக்கைகளை நீதிமன்றில் சமர்ப்பித்தமை.

4. போராட்டமொன்றில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் தன்னை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், உடல் ரீதியாகத் துன்புறுத்தியதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பேமச்சந்திர மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தமை.

5. எதிர்ப்பு பேரணி ஒன்றில் செய்தி சேகரித்துக்கொண்டிருந்தபோது எக்ஸ்போஷர் ஊடக நிறுவனத்தின் ஊடகவியலாளரான ஷபீர் மொஹமட் மீது இடையூறு விளைவித்தமை.

6. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை

உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளமை.

7. முகநூலில் வெளியிடப்பட்ட பதிவு தொடர்பில் ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.

8. அமைதியான போராட்டத்தை முறையற்ற விதத்தில் தடுத்ததாக இரு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவினால் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் நிராகரித்தமை.

9. வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரை விடுதலை செய்யுமாறு கோரி களுத்துறையைச் சேர்ந்த இரு பெண்கள் ஒன்றிணைந்து ஆரம்பித்த பேரணிக்கு காவல்துறையினர் கடும் இடையூறு விளைவித்தமை.

10. பொலிஸ் மா அதிபர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.

11. வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள பயங்கரவாத குற்றச்சாட்டை வாபஸ் பெறுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை அறிவிப்பு.

12. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த கல்வெவ சிறிதம்ம தேரருக்கு பிணை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டமை.

13. பத்திரிக்கையாளர்கள்குறித்து சுதந்திர ஊடக இயக்கம் நடத்திய ஆய்வு அறிக்கை மற்றும் பத்திரிகையாளர்களின் புலனாய்வு கட்டுரைகள் அடங்கிய புத்தக வெளியீடு.

14. முல்லைத்தீவு ஊடக அமையத்தின் அலுவலகத்திற்குச் சென்ற இராணுவத்தினர், குறித்த அமையத்தின் அதிகாரிகளிடம் தகவல் கோரியமை.

15. மட்டக்களப்பு ஊடகவியலாளரான செல்வக்குமார் நிலாந்தனை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டமை.

16. பொலிஸ் தலைமையகத்தில் மேற்கொள்ளப்பட்ட இரு முறைப்பாடுகள் தொடர்பில், காவல்துறையினர் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவிடமிருந்து ஒரே நாளில் இரு வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டனர்.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2022 நவம்பர் மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 09 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 05 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 01 |
| தொழில்சார் நிபுணத்துவம் | 01 |
| **மொத்தம்** | **16** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல் மற்றும் மனதை ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழலை உருவாக்குதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 09 சம்பவங்கள் நவம்பர் மாதத்தில் அவதானிக்கப்பட்டன.**

**அட்டவணை 2 : 2022 நவம்பர் மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 09**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 06 |
| தாக்குதல் | 03 |
| **மொத்தம்** | **09** |

**01. ஊடகங்களில் கருத்து தெரிவித்தமைக்காக மருத்துவரான சமல் சஞ்சீவ பணிநீக்கம் செய்யப்பட்டமை.**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள குழந்தைகளின் போசாக்கின்மை குறித்து ஹிரு தொலைக்காட்சி அலைவரிசை, தெரண பத்திரிகை, திவயின பத்திரிகை மற்றும் The Island பத்திரிகை ஆகியவற்றுக்கு அறிக்கை வழங்கியதன் காரணமாகவே இந்தப் பணித் தடை விதிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் சிரேஷ்ட பதிவாளர் (பயிற்சி) பதவியில் கடமைபுரிந்த வைத்தியர் சமல் சஞ்சீவ, மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கத்தின் (MCPA) தலைவராகவும் செயற்படுகிறார்.

இந்தப் பணித் தடைக்கு எதிராக நவம்பர் 10ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார் அளிக்கப்பட்டதுடன், நவம்பர் 22ஆம் திகதி உச்சநீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

ஆதாரம்: https://english.theleader.lk
https://www.youtube.com

**02. போராட்டமொன்றில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் தன்னை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், உடல் ரீதியாகத் துன்புறுத்தியதாகவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பேமச்சந்திர மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தமை.**

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக நவம்பர் 2ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது, பொலிஸ் அதிகாரிகள் தான் உள்ளிட்ட பெண்களைத் தகாத வார்த்தைகளால் துஷ்பிரயோகம் செய்து, உடல்ரீதியாகத் துன்புறுத்தியதாகவும், சம்பவத்தின் காணொளிகள் ஆதாரமாக முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://dasathalankanews.com

**03. எதிர்ப்பு பேரணி ஒன்றில் செய்தி சேகரித்துக்கொண்டிருந்தபோது எக்ஸ்போஷர் ஊடக நிறுவனத்தின் ஊடகவியலாளரான ஷபீர் மொஹமட் மீது இடையூறு விளைவித்தமை.**

அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராகத் தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பங்குபற்றுதலுடன் கொழும்பில் நவம்பர் 2ஆம் திகதி நடைபெற்ற பேரணியை அறிக்கையிட்டுக் கொண்டிருந்தபோது ஊடகவியலாளரும் சமூக ஆர்வலருமான ரேகா நிலுக்ஷி ஹேரத் என்பவரினால் இந்த இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மருதானை காவல் நிலையத்தில் ஷபீர் மொஹமட் முறைப்பாடு செய்ததையடுத்து, இருதரப்பினரின் இணக்கப்பாட்டுடன் குறித்த சம்பவம் சமரசம் செய்யப்பட்டது.

ஆதாரம்:
1. FMM- MFRM Desk
2. https://m.facebook.com

**04. முகநூலில் வெளியிடப்பட்ட பதிவு தொடர்பில் ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.**

கடந்த ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி காலிமுகத்திடல் மைதானத்தில் இடம்பெற்ற போராட்டத்திற்கு இடையூறு விளைவித்த பொலிஸ் உத்தியோகத்தர்களை இனங்காணுவதற்கு பொதுமக்களின் உதவியைக் கோரி இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள முகநூல் பதிவு தொடர்பில் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு இந்த அழைப்பை விடுத்துள்ளது. நாடாளுமன்றத்தில் பா.உ ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ், இவ்வாறான செயல்களைச் மேற்கொள்ளும் ஊடகவியலாளர்களை எதிர்காலத்தில் விசாரணைக்கு அழைக்க நேரிடும் எனக் குறிப்பிட்டார்.

ஆதாரம்: FMM-MFRM Desk

**05. வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரை விடுதலை செய்யுமாறு கோரி களுத்துறையைச் சேர்ந்த இரு பெண்கள் ஒன்றிணைந்து ஆரம்பித்த பேரணிக்கு காவல்துறையினர் கடும் இடையூறு விளைவித்தமை.**

சமூக செயற்பாட்டாளர்களான நிரோஷா டேனியல் மற்றும் பிரியந்தி பெர்னாண்டோ ஆகியோரால் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு பாதயாத்திரை ஆரம்பத்தில் களுத்துறை காவல்துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டதுடன், பின்னர் வாத்துவ, பாணந்துறை மற்றும் மொரட்டுவை ஆகிய இடங்களிலும் தடுத்து நிறுத்தப்பட்டது. பாணந்துறையில் நடைபயணத்தை தடுத்தமைக்கான சட்ட அடிப்படையைக் கேள்விக்குட்படுத்திய பெண்ணொருவர் பொலிஸாரால் தாக்கப்பட்ட அதேநேரம் உயர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இரண்டு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிய சம்பவம் சமூகத்தின் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது. இங்கு, செயற்பாட்டாளர்கள் இருவர் உட்பட 5 பேர் பாணந்துறை பொலிஸாரால் (நவம்பர் 12ஆம் திகதி) கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். பெண்கள்மீதான தாக்குதல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

ஆதாரம்:
1. https://www.bbc.com
2. https://www.youtube.com

**06. பொலிஸ் மா அதிபர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.**

கடந்த ஒக்டோபர் 9ஆம் திகதி காலிமுகத்திடல் மைதானத்தில் நடைபெற்ற போராட்டத்திற்கு இடையூறு விளைவித்த காவல்துறை அதிகாரிகளை அடையாளம் காண்பதற்கு பொதுமக்களின் உதவியைக் கோரி இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் வெளியிட்ட முகநூல் பதிவு தொடர்பாக நவம்பர் 13ஆம் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அங்குச் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பத்திரிக்கையாளரிடம் 4 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

ஆதாரம்: https://www.facebook.com

**07. முல்லைத்தீவு ஊடக அமையத்தின் அலுவலகத்திற்குச் சென்ற இராணுவத்தினர், குறித்த அமையத்தின் அதிகாரிகளிடம் தகவல் கோரியமை.**

நவம்பர் 24ஆம் திகதி முல்லைத்தீவு ஊடக அமையத்தின் அலுவலக வளாகத்துக்குள் பிரவேசித்த இலங்கை இராணுவத்தின் 591ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள், படைத் தளபதியின் உத்தரவுக்கு அமைய ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை குமணனிடம், ஊடக அமையத்தின் தலைவர்களின் பெயர்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் உள்ளிட்ட தகவல்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். அந்தத் தகவல்களை வழங்க ஊடகவியலாளர் மறுப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: https://www.tamilguardian.com

**08. மட்டக்களப்பு ஊடகவியலாளரான செல்வக்குமார் நிலாந்தனை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டமை.**

நவம்பர் 27ஆம் திகதி செங்கலடியில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் எஸ்.நிலாந்தனை இலங்கை வந்தவுடன் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு அறிவித்துள்ளனர். செப்டம்பர் 14ம் திகதியும், இதற்கு முன்பும் பலமுறை காவல்துறையினர் அவரிடம் விசாரணை நடத்தியமை குறிப்பிடத்தகது.

ஆதாரம்: https://twitter.com

**09. பொலிஸ் தலைமையகத்தில் மேற்கொள்ளப்பட்ட இரு முறைப்பாடுகள் தொடர்பில், காவல்துறையினர் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவிடமிருந்து ஒரே நாளில் இரு வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டனர்.**

நவம்பர் 30 ஆம் திகதி கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் பிரேமதிலக்க மற்றும் கொழும்பு தெற்கு மாவட்ட 4க்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுனேத் சாந்த ஆகியோர் தெமட்டகொடவில் உள்ள கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவிலும் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகம் கொழும்பு தெற்கு மாவட்ட 4க்கு பொறுப்பான உதவி அத்தியட்சகர் அலுவலகத்திலும் இந்த வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 11ஆம் திகதி கோட்டை காவல்நிலையத்திற்கு முறைப்பாடு செய்யச் சென்றபோது, காவல்நிலைய பொறுப்பதிகாரியின் அலுவலகத்தில் ஊடகவியலாளர் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பிலும், ஒக்டோபர் 9ஆம் திகதி இடம்பெற்ற அமைதிப் பேரணிக்கு இடையூறு விளைவித்த சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்கு எதிராகப் பொலிஸ் தலைமையகத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பிலேயே இந்த அழைப்புகள் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: https://www.facebook.com

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்

**நவம்பர் மாதத்தில் ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 05 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. அத்துடன் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான பாதுகாப்புப் துறையின் செயற்பாடு மற்றும் அந்தச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான சாதகமான சட்டரீதியான தலையீடுகள் என்பன இதில் அடங்கும்.**

**அட்டவணை 03 – 2022 நவம்பர் : சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் – 05 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 05 |
| **மொத்தம்** | **05** |

**01. தெரணியகல வீதியைச் சீரமைக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட 6 பேர் கைது!**

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ள தெரணியகல - பொல்கஸ்வத்த வீதியைச் சீரமைக்கக் கோரி பிரதேசவாசிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆதாரம்: https://www.facebook.com

**02. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரர் தொடர்பான விசாரணைகளின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கைகளை முதலில் நீதிமன்றில் வழங்க மறுத்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், பின்னர் அந்த அறிக்கைகளை நீதிமன்றில் சமர்ப்பித்தமை.**

இந்த மாணவர் செயற்பாட்டாளர்கள் தொடர்பான வழக்கு நவம்பர் 4 ஆம் திகதி தங்காலை நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் தொடர்பான அறிக்கைகளை நீதிமன்றத்திற்கு வழங்கத் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாம் கடமைப்பட்டிருக்கவில்லையெனப் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் சார்பில் ஆஜரான அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் மற்றும் சாட்சியங்களின் தொகுப்புகளை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு முன்னைய வழக்கு விசாரணையின்போது பயங்கரவாத விசாரணைப் பிரிவினருக்கு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரணை அதிகாரிகளுக்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், குற்றவியல் நடைமுறைச் சட்டவிதிகளின் கீழ் விசாரணையின் முன்னேற்றத்தைப் புகாரளித்தல் மற்றும் மேலதிக அறிக்கைகளின் மூலம் ஆதாரங்களை முன்வைப்பதில் புலனாய்வு அதிகாரிகள் விலக முடியாது எனக் கைதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உபாலி மொஹொட்டி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

நவம்பர் 25ஆம் திகதி குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இது தொடர்பான அறிக்கைகள் கொழும்பு நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகப் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர். இதன்படி, தங்கல்ல நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வந்த வழக்கு முடிவுக்கு வந்தது.

ஆதாரம்: 1. FMM- MFRM Desk
2. https://www.youtube.com

03. **பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள வசந்த முதலிகே சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளமை.**

நவம்பர் 10ஆம் திகதி இந்தத் தீர்ப்பை வழங்கிய உச்ச நீதிமன்றம், வசந்த முதலிகே நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துமாறும், சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் அவரை ஆஜர்படுத்தி முழுமையான அறிக்கையை வரவழைக்க நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விஜித் மலல்கொட மற்றும் எஸ்.துரைராஜா ஆகியோர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதுடன், மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் ஆஜராகவுள்ளார். இந்த மனு ஜனவரி 31ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, வசந்த முதலிகே நவம்பர் 14ஆம் திகதி தங்காலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

ஆதாரம்: https://sinhala.adaderana.lk

04. **பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த கல்வெவ சிறிதம்ம தேரருக்கு பிணை வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டமை.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிறிதம்ம தேரர் நவம்பர் 22ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதன்படி, சிறிதம்மதேரருக்கு தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் விடுவிக்க உத்தரவிடப்பட்டதுடன், குறித்த தேரரின் வெளிநாட்டு பயணங்கள் தடை செய்யப்பட்டு, ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை பயங்கரவாதத் தடுப்புப் பணியகத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் வழக்கு தொடர்பான அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர்க்கவும், வழக்கு விசாரணையின்போது வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் பிணை நிபந்தனைகளாக விதிக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கு டிசம்பர் 12ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஆதாரம்: https://sinhala.adaderana.lk

05. **அமைதியான போராட்டத்தை முறையற்ற விதத்தில் தடுத்ததாக இரு சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவினால் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் நிராகரித்தமை.**

ஒக்டோபர் 10ஆம் திகதி காலி முகத்திடலில் இடம்பெற்ற போராட்டத்திற்கு இடையூறு விளைவித்தமைக்காக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நளின் தில்ருக் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸ் ஆகியோருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன், ஒக்டோபர் 21 ஆம் திகதி கோட்டை நீதவான் குறித்த அதிகாரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார். ஆனால் முறைப்பாட்டாளருக்கு அறிவிக்காமல் , நவம்பர் 1 ஆம் திகதி சட்டமா அதிபர் முன்வைத்த பிரேரணையின் மூலம் நவம்பர் 1 ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது குறித்த அறிவிப்பு (நோட்டீஸ்) ரத்து செய்யப்பட்டது. மறுநாள், முறைப்பாட்டாளர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். நவம்பர் 8ஆம் திகதி வழக்கு மீண்டும் அழைக்கப்பட்டபோது, இருதரப்பினரும் தமது கருத்துக்களை நீண்ட நேரம் முன்வைத்ததுடன், நவம்பர் 25ஆம் திகதி வழக்கை விசாரணைக்கு உட்படுத்தாமல் குறித்த வழக்கை நிராகரிக்கும் முடிவு அறிவிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்போவதாக மனுதாரர் குறிப்பிட்டார்.

ஆதாரம்:

1. https://srilankabrief.org
2. https://www.facebook.com
3. https://www.facebook.com

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள் "ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் ஒரு சம்பவம் நவம்பர் மாதத்தில் அவதானிக்கப்பட்டது. மனித உரிமை பாதுகாவலர்கள் மேற்கொண்ட பல தலையீடுகள் இந்தக் குறிக்காட்டியுடன் தொடர்புடையதாக இருந்த போதிலும், நடைமுறை சிக்கல் காரணமாக, அவை அனைத்தும் இங்குத் தனித்தனியாகக் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

**அட்டவணை 04 – 2022 நவம்பர் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் – 01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **வசந்த முதலிகே மற்றும் கல்வெவ சிறிதம்ம தேரருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள பயங்கரவாத குற்றச்சாட்டை வாபஸ் பெறுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை அறிவிப்பு.**

அவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள அடிப்படையற்ற பயங்கரவாதக் குற்றச்சாட்டுகள் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும் என்றும், தடுப்புக் காவல் உத்தரவு நீடிப்பதை நிறுத்த வேண்டும் என்றும் அந்த அமைப்பு கூறுகிறது.

பயங்கரவாதஎதிர்ப்புக்குற்றச்சாட்டின்கீழ்ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுத்து வைப்பது, இலங்கை அரசியலமைப்பு மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்மீதான சர்வதேச உடன்படிக்கை மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையைத் தெளிவாக மீறுவதாகும் என்று அந்த அமைப்பு குறிப்பிடுவதுடன் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுருத்திக்கொள்கின்றது.

ஆதாரம்: [https://www.amnesty.org](https://www.amnesty.org)

## தொழில்சார் நிபுணத்துவம்

**‘தொழில்சார் நிபுணத்துவம்’ என்பது ஊடக சுதந்திரம் தொடர்பாகக் கவனிக்கப்படும் ஒரு முக்கிய காரணியாகும் சிறந்த கல்வியை பெற்ற பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர்களின் பணி நிலைமைகள், பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழுவிற்கான சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல், சுய–தணிக்கை, தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் பத்திரிகையாளர்களின் நிபுணத்துவ சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் மற்றும் பத்திரிகையாளரின் பங்குபற்றிய புரிதல், ஊடக தொழிலுக்கான அங்கீகாரம் போன்ற குறிகாட்டிகள் தொழில்சார் நிபுணத்துவம் என்ற ஆக்கக் கூறை பிரதிநிதிப்படுத்துகின்றது. குறித்த தலைப்பின் கீழ் ஒரு சம்பவம் அறிக்கையிடப்பட்டுள்ளது.**

**அட்டவணை 05 – 2022 நவம்பர்: தொழில்சார் நிபுணத்துவம் – 01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பத்திரிகையாளர்களின் சேவை நிபந்தனைகள்/ ஊடகவியலாளர்களின் பணி நிலைமை தொடர்பான புரிதல்/ஊடகத் தொழிலுக்கான அங்கீகாரம் | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **பத்திரிக்கையாளர்கள்குறித்து சுதந்திர ஊடக இயக்கம் நடத்திய ஆய்வு அறிக்கை மற்றும் பத்திரிகையாளர்களின் புலனாய்வு கட்டுரைகள் அடங்கிய புத்தக வெளியீடு.**

ஊடகவியலாளர்களின் தொழில்சார் உரிமைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் சுதந்திர ஊடக இயக்கம் நடத்திய ஆய்வறிக்கை மற்றும் பொது சேவை மதிப்புகள் மற்றும் புலனாய்வு அறிக்கையிடல் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களால் தொகுக்கப்பட்ட புலனாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இங்கு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வு நவம்பர் 24ஆம் திகதி கொழும்பு Grand Oriental ஹோட்டலில் நடைபெற்றது.

ஆதாரம்: FMM-MFRM Desk

**அட்டவணை 6: ஊடக சுதந்திரம் : 2022 ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2022 ஜனவரி–ஒக்டோபர் | | 2022 நவம்பர் |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 55 | | 09 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 97 | 23 | 05 |
| ஊடக சுயாதீனத்துவம் | 06 | | - |
| தொழில்சார் நிபுணத்துவம் | 06 | | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 16 | 01 | 01 |
| **மொத்தம்** | **180** | **24** | **16** |

[2022 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி வரை இங்கு பார்வையிடவும்]

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.

Free Media Movement
Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com|Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka|#FMM25